புதிய அவையம்

Vol. 09, Issue – 02, December - 2025

கட்டுரை பெறப்பட்டது : November - 2025 கட்டுரை ஏற்கப்பட்டது : December – 2025

---

# செம்மாந்த தமிழனின் செல்வச் சிறப்புகள்

---

முனைவர் ஜெ.ஜெயசித்ரா
உதவிப்போராசிரியர்
தமிழ்த்துறை
தூயநெஞ்சக்கல்லூரி
திருப்பத்தூர்.

---

**ஆய்வுச் சுருக்கம்**

தமிழர்கள் என்றாலே ஒரு தனிச் சிறப்புப் பெற்ற அடையாளம், கலாச்சாரம், பண்பாடு மற்றும் வரலாற்று சிறப்பு உண்டு.அவர்கள் ஒவ்வொருவரும் தங்களுக்கென சில உயரிய பண்புகளையும் வாழ்வியல் விழுமியங்களையும் தன்னகத்தே கொண்டு செம்மாந்த செல்வத் தமிழர்களாக இருந்துள்ளனர்.இதற்கான சான்றுகள் எட்டுத்தொகை, பத்துப்பாட்டு போன்ற நூல்களில் பரவலாகக் காணப்படுகின்றன. இதனடிப்படையில் அதாவது தமிழனின் செல்வம் என்பது நாம் நினைப்பது போல் வெறும் பொருளாதார வளத்தினை மட்டும் மையம் கொண்டதன்று. மாறாக வள்ளுவனின் வாக்கிற்கிணங்க **கல்வி, கேள்வி, உழைப்பு, மனம், மனிதம், பண்பு, விருந்தோம்பல், தொழில், உரிமை உணர்வு** என அனைத்தும் சேர்ந்ததன் முழுவடிவமே செல்வம். இதனை மேலே குறிப்பிட்ட (எட்டுத்தொகை,பத்துப்பாட்டு) சங்க இலக்கிய பாடல்களின் துணைக் கொண்டு செம்மாந்த தமிழனின் செல்வச் சிறப்பை ஆராய்வதாக இக்ககட்டுரை அமைகிறது.

**முன்னுரை**

தமிழன் என்பவன் உடமையினையும் செல்வத்தினையும் தன்னிடம் வைத்திருப்பதில் பெருமை கொள்ளவில்லை.அதனை மற்றவர்களுக்கு கொடுப்பதில் தான் பெருமை கொண்டிருக்கின்றான் என்று நமக்கு சங்க இலக்கியங்கள் கூறுகின்றது.சங்கப் பாடல் கள் தமிழ் இலக்கியப் பேழை.அழியாதகற்பனைக் கருவூலம்.இத்தகு மேன்மை பொருந்தி இலக்கியங்களைத்தான் நாம் எட்டுத்தொகை,பத்துப்பாட்டு என்று குறிப்பிடுகின்றோம்.இச்சங்கப்பாடலில் தான் நிலம்புடை பெயர்வதாயினும் ஒருவன் செய்த நன்றியை மறக்காதவன்,நீதி தவறாமல் வாழ்ந்தவன் நம் தமிழன். அவன் காதலையும் வீரத்தையும் இரு கண்களென மதித்தவன்.எனவேதான் தமிழனிடம் கணக்கிலா அளவு செல்வம் வந்து சேர்ந்த போதிலும் **பணிவு, பண்பு, பரிவு,பாசம், உதவி, ஒழுக்கம்,உழைப்பு, உண்மை, நேர்மை, வீரம், நட்பு** போன்ற நற்பண்புகள் சிறிதும் வழுவாமல் வாழ்ந்துள்ளான் என்பதில் சிறிதும் ஐயம் இல்லை.மேற்கூறிய முறைகளைப் பின்பற்றி வாழ்ந்த தமிழன்,தான் நினைக்கும் செல்வம் என்பதே வேறு வகையிலானது. குறிப்பாக அவன் வாழும் நிலம், இயற்கை,வாழ்தலுக்கான முறை ஆகியவற்றோடு தொடர்புடையது என்பதை மெய்ப்பித்துக் காட்டும் வகையில் தகுந்த சங்கப் பாடல்களை எடுத்துக்காட்டி விளக்குவதாக இக்கட்டுரை அமைகிறது.

**செல்வம் – விளக்கம்**

தற்காலச் சூழலில் நாம் செல்வம் என்பதற்கு பொருளாதார அடிப்படையில் அசையும்,அசையா சொத்துக்கள் அதிகம் வைத்திருப்பவர்களையே செல்வம் உடையவர்கள் என்று கருதும் நிலையில் இருக்கின்றோம். ஆனால் உண்மை அதுவல்ல.செல்வம் என்பதற்கு கழகத் தமிழ் அகராதி அருமையான விளக்கத்தினைக் கூறுகின்றது.அதாவது,**செல்வம், இன்பம், ஐசுவரியம், கல்வி, கேள்வி, செழிப்பு, சீர், சுவர்க்கம்,பேறு,வீறு1** என்று பலவற்றையும் உள்ளடக்கிய ஒரு வடிவமாக பொருள் தருகின்றது.

**செல்வம் – வகைகள்**

பொதுவாக செல்வங்களை பதினாறு என்று குறிப்பிடுவது வழக்கமாகும்.அதாவது,**1.கல்வி,2.புகழ்,3.வலிமை,4.வெற்றி,5.நான் மக்கள், 6.பொன், 7.நெல், 8.நல்விதி,9.நுகற்ச்சி, 10.அறிவு,11.அழகு, 12.பொறுமை,13.இளமை, 14.துணிவு**

**15.நோயின்மை,16.வாழ்நாள்.** என்று குறிப்பிடப்படுகின்றது.பொதுவாக தமிழன் மற்றவர்களை வாழ்த்தும் போது கூட,**'பதினாறும் பெற்று பெறுவாழ்வு வாழ்க'** என்று வாழ்த்துவதை மரபாகக் கொண்டுள்ளான். அகராதி தரும் விளக்கத்தின் அடிப்படையில் பார்த்தால் இன்பமே முதலில் இடம்பெற்றுள்ளது.மேலும், வாழ்க்கையின் பொருளை விளக்க வந்த நமது பழந்தமிழ் இலக்கண நூலான தொல்காப்பியத்தின் களவியல் நூற்பாவும் ,

**இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு**

**அன்பொடு புணர்ந்த ஐந்திணை மருங்கின்2**

என்று இன்பத்தையே முதற்க்கண் வைத்து பேசுகின்றது.எனவே பழந்தமிர் இன்பத்தையே முதலாகக் கொண்ட நெறியுடைவர்களாக வாழ்ந்துள்ளார்கள் என்பதனை இதன்வழி அறிய முடிகின்றது.

**இலக்கியங்கள் காட்டும் – செல்வம்**

சங்க இலக்கியம் செல்வம் என்பதை வெறும் பணமாக மட்டுமே கருதாமல் உண்மையான செல்வமாக **அறம், வீரம், கொடை, விருந்தோம்பல், புலமை, அன்பு, ஒழுக்கம்** போன்றவற்றையே முக்கியச் செல்வமாகக் கருதியுள்ளன,இவற்றுள்

தமிழனின் முக்கியச் செல்வங்களாவன

**1.அறம்** - இல்லறக் கடமை ஆற்றுதல்

**2.ஒழுக்கம்** - ஒழுக்க நெறியில் நின்று ஒழுகுதல்

**3.வீரம்** - புறம் காட்டும் போர் அறம்

**4.கொடை** -வள்ளல் தன்மை,பிறர் உதவும்மனப்பாங்கு

**5.புலமை** -அறிவுத்திறமை,வறுமையிலும் புலவர்களின் மேன்மை

**6.அன்பு** - காதல்,குடும்பம்,அன்பு நிறைந்த வாழ்க்கை

**7.விருந்தோம்பல் –** விருந்தோம்புதல் வாழ்வின் உயிர்நாடியாகக் கருதப் பட்டது.

இவ்வாறாகக் கருதப்பட்ட செல்வ நிலைகளுக்கு இடையிலே சங்க இலக்கியங்களான தொகையிலும்,பாட்டிலும் இடம்பெற்றுள்ள **இயற்கைசார் செல்வம்,நிலம்சார் செல்வம்,,அகம்சார் செல்வம்,புறம்சார் செல்வம்** என்ற வகையிலே தமிழனின் செல்வநிலைகள் குறித்து ஏராளமான சான்றுகள் உள்ளன.அவற்றுள் சிலவற்றை மட்டும் இக்கட்டுரையில் ஆராயலாம்.

**செம்மாந்த தமிழனின் செல்வநிலைகள்**

சாகாவரம் பெற்ற சங்க இலக்கிய நூல்களான எட்டுத்தொகையிலும் பத்துப்பாட்டிலும் தமிழனின் செல்வங்கள் பின்வருமாறு பல பரிமாணங்களைக் கொண்டு இலங்குகின்றது. அவைமுறையே ,

**1.இயற்கை வளம்சார் செல்வம் –** உலக மொழிகளில் பெரும்பான்மை அறிவியல் ஆற்றல் சார்ந்த நிகழ்வுகளையே பேசியிருக்கும். இந்நிலையில் நம் தாய்மொழியாகிய தமிழ் மட்டுமே இயற்கையின் மகத்துவத்தை இசைந்து இயல்பட மொழிந்துள்ளது.அதாவது நிலம், நீர், காற்று, வானம், தீ, பூக்கள், பறவைகள், நதிகள், கடல், மலை என்று அனைத்தையும் பாடியுள்ளார்கள் நம் தமிழர்கள்.

பத்துப்பாட்டு நூல்களுள் ஒன்றான சிறுபாணாற்றுப்படையிலே மூவேந்தர்களின் நாட்டுச் சிறப்பு பேசப்படுகின்றது.அதில் மூன்று நாடுகளுமே மிகுந்த இயற்கை செல்வவளங்களோடு இணைந்த வாழ்வினை விரும்பியுள்ளார்கள் என்பது பின்வரும் பாடல்களின் வழி அறியலாம் .

**எ.கா: சேரநாட்டு இயற்கை செல்வ வளம்**

எருமை ஒன்று தன் காலடியில் சிக்கிய கொழுத்த மீன்கள் நசுங்கும்படி வயலில் இறங்கி நடக்கிறது.அதுமுதலில் செங்காந்தள் மலரை மேய்ந்து,பின் மிளகுக் கொடிகள் படர்ந்த பலா மரத்தின் அடிப்பகுதியினை அடைகிறது.பின்தேன் கமளும் செங்கழுநீர் மலர்களை மேய்ந்துவிட்டு காட்டு மல்லிகை படுக்கையில் படுத்துக் கொள்கிறது.இதனை,

**கொழுமீன் குறைய ஒதுங்கி வள்ளிதழ்க்**

**கழுநீர் மேய்ந்த கயவாய் எருமை 3 (சிறுபாண்.41-42)**

இதே போன்று சோழ,பாண்டிய நாட்டு இயற்கை வளங்களும் பேசப் பட்டிருக்கும்.

**2.நிலம்சார் செல்வம்** – இவற்றில் குறிஞ்சி - மல்லை – மருதம் - நெய்தல் – பாலை என்ற ஐவகை நிலங்களில் விளைந்த பொருட்களே இங்கு செல்வங்களாக கருதப்படுகின்றது.

சங்க இலக்கியத்தில் நிலம் என்பது வாழுமிடம்,அதிகாரம் வீரம்,நிலையாமை என பல பொருண்மையில் இடம்பெற்றுள்ளது.இதில் ஐவகை நில வாழிடமைப்பின் செல்வநிலைகளைப் பற்றி தனித்தனியே இனி ஆராயலாம்.

**குறிஞ்சி** (மலையில்) – ஐவனம்,மலைநெல்,தோரை,கிழங்கு,தேன்

இங்கு மலைநெல் பற்றி நேரடியாக பேசவில்லை எனினும் ,மலைகள் சார்ந்த நிலங்களில் நீர் வற்றாமல் விளைச்சல் அதிகம் நெல் போன்றன விளைந்துள்ளன என்ற குறிப்பு காணப்படுகின்றது.இதனை,

**கல் காயும் கடு வேனிலொடு**

**இருவானம் பெயல் ஒழிப்பினும்**

**வரும் வைகல் மீன் பிறழினும்**

**வெள்ளம் மாறாது விளையுள் பெருக4 (மதுரைக்.106-109)**

**முல்லை**(காட்டில்) – தினை,வரகு

தினை,வரகு போன்ற சிறுதானியங்களைப் பற்றி சங்க இலக்கியங்களில் பல பாடல்களில் காணப்படுகின்றன.அவற்றுள்,

**கவைக் கதிர் வரகின் அவைப்புறு வாக்கல்**

**தாது எரு மருகின்போதொடு பொதுளிய**

**வேளை வெண்பூ வெண்தயிர்க் கொளீஇ**

**ஆய்மகள் அட்ட அம் புளி மிதவை5 (புறம்.215)**

என்ற பாடலடிகளின் மூலம் தினை மற்றும் வரகுப் பயிர்களின் பெருமையும்,தமிழனின் அறுசுவை உணவுப் பழக்கமும் நன்கு தெளியலாகின்றது.

**மருதம்**(வயலில்)- நெல்,கரும்பு,வாழை

**அரிந்து கால் குவித்த செந்நெல் 6 (அகம்.116)**

**பழஞ் செந்நெல்லின் முகவைக் கொள்ளாள் 7 (அகம்.126)**

**வெண்ணெல்வைப்பின்பருவூர்ப்பறந்தலை 8 (அகம்.116)**

**பால் பெய் செந்நெல் பாசவல் சோற்றோடு 9 (அகம்.237)**

**நெய்தல்**(கடல்) –மீன்,உப்பு,கடல் சார்ந்த பொருட்கள்

நெய்தல் நிலச்செல்வ வளங்களாக மீன்பிடித்தல், உப்பு விளைத்தல், முத்தெடுத்தல், சங்கு அறுத்தல் என குறுந்தொகை, அகநானூறு, ஐங்குறுநூறு, நற்றிணை,கலித்தொகை போன்ற நூல்களில் கூறப்பட்டுள்ளன.அவற்றுள்,

**உவர் விளை உப்பின் உழாஅ உழவர்**

**ஒழுகை உமணர் வருபதம் நோக்கி**

**கானல் இட்ட காவற் குப்பை**

**புலவு மீன்உணங்கள் படுபுள் ஓப்பி**

**மட நோக்கு ஆயமொடு உடன் ர்பு ஏறி**

**எந்தை திமில்,இது நுந்தை திமில் என10 (நற்றி.331,பக்.611)**

என்று உலர்த்திய மீனை எடுக்க வரும் பறவைகளை விரட்டும் தோழியர்  உப்புக் குன்றின் மீதேறி இது எம் தந்தையின் படகு, அதுநும் தந்தையின் படகு என்றும்,அவைகள் சுற்றத்தாரின் படகுகள் என்றும் கூறுவதைப் பார்க்கின்றபோது சங்கத் தமிழர்கள் குறிப்பாக நெய்தல் நிலமக்கள் ஒவ்வொருவருமே தனித்தனி படகுகளைக் கொண்டு ஆண்,பெண் வேறுபாடின்றி அனைவரும் ஏதூ ஒரு தொழிலைச் செய்து  பொருள் செல்வத்துடன் மிகவும் சிறப்பாக வாழ்ந்துள்ளார்கள் என்பதனை நன்கு அறிய முடிகின்றது. **பாலை**(மணல்) – அரிதாகக் கிடைக்கும் சில தாவரங்கள் மற்றும் வழிப்பறி செய்து சேர்த்த பொருட்கள்.

**3.அகம்சார் செல்வம் –** தலைவன் தலைவிக்குமிடையே உள்ள உறவு ,பிரிவிற்குப் பின்னர் தோன்றும் வளமான உறவு, கற்பு  மற்றும் இல்லம் தேடி வந்தவர்களின் விருந்தோம்பல்பண்பு,இல்லறத்தில் ஒழுகும் ஒழுக்கம் போன்றவை அகம்சார் செல்வங்களாக அறியப்படுகின்றது.இங்கே தலைவி ஒருத்தி தன் தலைவன் மீது வைத்திருக்கும் அன்பின் மிகுதியால் பிதற்றுகிறாள் .இதனை,

**சாதல் அஞ்சேன் அஞ்சுவல் சாவின்**

**பிறப்புப் பிறிது ஆகுவது ஆயின்**

**மறக்குவேன் கொல்என் காதலன்11** **(நற்றி.397)**

என்ற பாடல்  அடிகள் நன்கு உணர்த்துகின்றன.

**4.புறம்சார் செல்வம் -** மூவேந்தர்கள்  போர்களச் சிறப்பு, படைச்சிறப்பு (யானை,குதிரைகள்,வாள்,மகுடம்), வெற்றிச் சிறப்பு வீரத்தின் அடிப்படையிலும் கொடைத்தன்மையின் அடிப்படையில் வள்ளல் தன்மை மற்றும் புலவர்களுக்கும், இரவலர்களுக்கும் அள்ளிக் கொடுக்கும் மன்னர்கள் (பாரி,ஓரி,காரி,ஆய் அண்டின்,பேகன்,அதியன்) செல்வச் சிறப்புகள் மற்றும் மன்னனின் செழிப்பான ஆட்சி,பெரிய நகரங்கள்,ஆடை  அணிகலன்கள் போன்றனவும், மன்னர்களின் நீதி வழுவாத ஒழுக்கம், அறச்செயல்கள் மக்களுக்காக செய்த சமூகக் கடமைகள் போன்றன புறம்சார் செல்வங்களாக அறியப்படுகின்றது. **எ.கா**:பதிற்றுப்பத்தில் இரண்டாம் பத்தினில் இடம்பெற்றுள்ள  இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன்  தமிழகத்தின் சிறப்பினை உலகறியச்

செய்தவன்.தம்மை நம்பி வந்த வீரர்களை கவசம் போன்று காத்தவன்,போரில் வென்ற பெருஞ் செல்வங்களை எல்லாம் படைவீரர்களுக்கும்,குடி மக்களுக்கும், பொது மக்களுக்கும் அளித்துள்ளான்.உறவினர்களின் நீண்ட நாள் பசியைப் போக்க மாமிசம் கலந்த வெண்சோற்றினை அளித்துள்ளான்.

**நிறைவுரை**

மேற்கண்ட அடிப்படையிலே நாம் தரவுகளை உற்று நோக்கினால் ஒரு உண்மை நமக்கு நன்கு புலனாகின்றது.தமிழன் தனி ஒருவனுக்காக வாழ்ந்த பண்பாட்டினை உடையவன் அல்ல என்பதும் ,அவன் நிலையில்லாத பொருட் செல்வத்தை மட்டுமே செல்வமாக கருதவில்லை என்றும், நிலைத்த நிலைபேறுடைய செல்வம் இயற்கையைப் போற்றலிலும், அன்புணர்வினை வெளிப்படுத்துவதிலும், பகைவர்களிடம் வீரத்தை வெளிப்படுத்துவதிலும், உழைப்பிலும், உண்மையிலும் உதவியிலும், நேர்மையிலும், ஒழுக்கத்திலும் காணுகின்ற செல்வத்திலே ஊறித் திளைத்து செம்மாந்த தமிழனாக இருந்திருக்கின்றான்.

**துணைநின்ற நூல்கள்**

1.கழகத் தமிழ் அகராதி,கழகப் புலவர் குழு, சைவசித்தாந்த நூற்ப் பதிப்புக் கழகம் -2010 , பக் .490

2.தொல்காப்பியம் – அகத்திணையியல் இளம்பூரணர் உரை, சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம்,1987,சென்னை.

3.பத்துப்பாட்டு மூலமும் உரையும், பதிப்பாசிரியர் -பேரா மு.சண்முகம்பிள்ளை, பக்.124, முல்லை நிலையம் -2009.

4.பத்துப்பாட்டு பகுதி-2, மூலமும்தெளிவுரையும், பக்.5,உரை. வி.நாகராசன் , நியூ செஞ்சுரி புக்ஹவுஸ், சென்னை -2014.

5.புறநானூறு, புத்ததகம்-2, மூலமும் உரையும், பக். 519, கு.வெ.பால சுப்பிரமணியன், நியூ செஞ்சுரி புக்ஹவுஸ், சென்னை -2014.

6.அகநானூறு, புத்ததகம்-1, மூலமும் உரையும்,கு.வெ.பாலசுப்பிரமணியன்,நியூ செஞ்சுரி புக்ஹவுஸ், சென்னை -2014.

7.மேலது

8.மேலது

9..அகநானூறு, புத்ததகம்-2, மூலமும் உரையும், பக்.519, கு.வெ.பாலசுப்பிரமணியன், நியூ செஞ்சுரி புக்ஹவுஸ், சென்னை -2014.

நற்றி.331,பக்.611)

10.நற்றிணை, மூலமும் உரையும், கு.வெ.பால சுப்பிரமணியன், நியூ செஞ்சுரி புக்ஹவுஸ், சென்னை -2014.